தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# இந்திய விடுதலையில் நாமக்கல் கவிஞரின் பங்கு

**மு. பிரபாகரன்,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, தூயவளனார் தன்னாட்சிக்கல்லூரி , திருச்சிராப்பள்ளி.

**ஆய்வுச் சுருக்கம்**

விடுதலை இந்தியாவை உருவாக்கப் பல்வேறு விதமான போராட்டங்களை மக்கள் நடத்தினார். அப்போராட்டங்களை ஏற்று நடத்திய தலைவர்கள் முதல் அதில் பங்கு கொண்ட பாமரமக்கள் வரை அனைவரையும் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம் அவர்களில் ஒருவரான "நாமக்கல் கவிஞர்" என்று அழைக்கப்படுகின்ற வெ.இராமலிங்கம் பிள்ளையின் பெரும் பங்களிப்பை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**திறவுசொற்கள்**

சர்வேசா , நித்தியம், மாள

**முன்னுரை**

ஆங்கிலேயரால் அடிமைப்படுத்தப்பட்டு உரிமையிழந்து கட்டுண்டு கிடந்த இந்நாட்டினை எழுச்சிபெறச் செயதவர் எண்ணற்ற மக்களும் தலைவர்களும்தான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இந்திய விடுதலைப் போர் ஓர் சகாப்தம் ஆகும், இந்திய தேசியம் ஒரே நாளில் உருவான உலக அதிசயங்களில் ஒன்றல்ல. மாறாக அது நீண்ட காலமாகப் பல்வேறு போராட்டங்களையும் உயிர்த் தியாகங்களையும் கொடுத்துப் பெற்றதே சுதந்திரம் ஆகும்.

"தண்ணீர் விட்டா வளர்த்தோம்

சர்வேசா இப்பயிரைக்

கண்ணீரால் காத்தோம்"

எனப் பாடும் முண்டாசு கவி பாரதியின் பாடலின் மூலம் நம் முன்னோர்கள் அடைந்த துயரங்களை அறியமுடிகிறது.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு பெருமைக்குரிய ஒன்றாகும். 19ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே தென்னிந்தியக் கிளர்ச்சிக்குத் தோற்றுவாயாகத் தமிழகம் திகழ்ந்தது 1857ஆம் ஆண்டு நடந்த சிப்பாய்க் கலகத்தை முதல் இந்திய விடுதலைப் போர் என்று வரலாற்றுப் பேராசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால் சிப்பாய்க்கலகம் ஏற்படுவதற்கு முன்னதாகவே தமிழகத்தில் 1806ல் வேலூர் புரட்சி ஏற்பட்டது. இப்புரட்சியே முதல் சுதந்திரப்போர் எழுவதற்கு அடிகோலியது என்பதை எவராலும் மறுக்கமுடியாது. ஆயினும் தொடக்ககால ஆங்கிலேய ஆதிக்க எதிப்புப் போராட்டங்கள் முறியடிக்கப்பட்டன. பின்னர் ஆலன் ஆக்டேவியன்ஹியூம் என்னும் ஆங்கிலேயரால் இந்திய தேசிய காங்கிரசு என்னும் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. அதன் மூலம் இந்தியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படலாயினர்.

**விடுதலைப் போராட்டத்தில் நாமக்கல் கவிஞரின் பங்கு**

நாமக்கல் மாவட்டத்தில் காவிரி ஆற்றின் கரையோரம் அமைந்துள்ள மோகனூர் என்னும் சிற்றூரில் 1888ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 19ஆம் தேதியன்று பிறந்தார். அவரது தந்தையாரான வெங்கடராமன் தலைமைக் காவலராகப் பணியாற்றி வந்தார். அவரது தாயார் அம்மணி அம்மாள் என்பவர் சேலத்துக்கருகிலுள்ள சிற்றூரில் பிறந்தவர். இவர்களுக்கு எட்டாவது குழந்தையாகப் பிறந்தவர் இராமலிங்கம் ஆவார்.

1906ஆம் ஆண்டில்தான் தேச பக்தி உணர்ச்சியால் உந்தப்பட்டு அவர் அரசியலில் நுழைந்தார். வங்காளப் பிரிவினையின் விளைவாக நாடெங்கும் பெருங்குழப்பம் நிலவியது. அரவிந்தர் போன்றவர்களது கனல் கக்கும் கட்டுரைகள் இளைஞர்களிடையே தேச பக்தியைத் தூண்டிவிட்டது. முக்கியமாக கர்மயோகி என்ற இதழில் அரவிந்தர் எழுதிய உணர்ச்சி மிக்க கட்டுரைகளும் வந்தேமாதரம் என்ற தேசியப் பாடலும் பல இளம் உள்ளங்களில் தேச பக்திப் புயல் வீசக் காரணமாக இருந்தன.அத்தகைய இளைஞர்களில் இராமலிங்கமும் ஒருவர். அரவிந்தருடைய கட்டுரைகளில் மட்டுமின்றி சுரேந்தரநாத் பானர்ஜி, சி.ஆர்.தாஸ், கோபால கிருஷ்ண கோகுலே, பாலகங்காதரதிலகர் ஆகிய

மூதறிஞர்கள் எழுதிய கட்டுரைகளையும் அவர்களாற்றிய சொற்பொழிவுகளையும் விரும்பிப் படித்துவந்தார். அதன் விளைவாக நாட்டின் விடுதலையின்பால் அவருக்குத் தனி நாட்டம் ஏற்பட்டது. அவரது நெருங்கிய நண்பராக விளங்கிய நாகராஜ் என்பவர் ஒரு பழுத்த தேசியவாதி மற்றும் வழக்கறிஞர் ஆவார்.

கவிஞரின் தேசிய உணர்ச்சியும் தேச பக்தியும் மேன்மேலும் வளர்வதற்கு அவர் ஒரு பெருங்காரணமாக இருந்தவர். ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போர் புரிந்து நாட்டின் விடுதலைக்காகப் பாடுபடுவதே தங்களது வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்க வேண்டுமென இவ்விரு நண்பர்களும் ஒரு சபதத்தை மேற்கொண்டனர். அதன் விளைவாகக் கவிஞர் தமிழ் நாடெங்கும் ஒரு சூறாவளிப் பயணத்தை மேற்கொண்டு தேச பக்தி ததும்பிய சொற்பொழிவுகளைச் சென்றவிடமெல்லாம் நிகழ்த்தி மக்களின் ஒருமித்த பாராட்டுக்களைப் பெற்றார்.

1914 ஆம் ஆண்டில் திருச்சி மாவட்டக் காங்கிரசின் செயலாளராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். உணர்ச்சிமிக்க பேச்சாலும் செயலாலும் அவரது செல்வாக்கு காங்கிரஸ் வட்டாரங்களில் நாளுக்கு நாள் பரவியதன் காரணமாகக் கரூர் வட்டாரத்தின் காங்கரஸ் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். நாளடைவில் நாமக்கல் காங்கிரஸ் வட்டாரத்தின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1921 ஆம் ஆண்டு முதல் 1930 வரை அவர் தலைவர் பதவியில் நீடித்தார். அச்சமயத்தில் அவர் பாண்டிச் சேரிக்குச் சென்று தீவிரவாதத் தலைவர்களாக விளங்கிய வ.வே.சு ஐயர், சுப்பிரமணிய சிவா போன்ற சான்றோர்களைச் சந்தித்து உரையாடி உற்சாகம் பெற்றார். அரவிந்தர் சந்திக்க இயலாதது குறித்து பெரிதும் வருத்தமுற்றார். தமிழ்நாட்டில் காங்கிரஸ் நிறுவனம் என்ற ஒரு பெருங் கட்டிடத்திற்கு உற்றதொரு தூண்போல் விளங்கினார். ஆங்கிலேயரின் கொடிய ஆட்சியைக் கண்டித்து கவிஞர்; எழுப்பிய குரல் தமிழ்நாடெங்கும் ஒலித்தது. பாடல்கள் இடையிடையே கலந்து கவிஞர் ஆற்றிய உணர்ச்சிமிக்க சொற்பொழிவுகளைச் செவிமடுத்த மக்கள் மெய்மறந்து நின்றனர். இளம்பள்ளி ஜமீன்தாராக விளங்கிய இராஜலிங்கம் அவர்களது உதவியைக் கொண்டு மாவட்ட அரசியல் மாநாடு ஒன்றை திருச்சியில் கூட்டினார். திருமதி அன்னிபெசன்ட் அம்மையார் அம்மாநாட்டில் கலந்து கெண்டு பேருரையாற்றினார்.

அச்சமயம் தேசிய ஓவியக் கண்காட்சி ஒன்று அங்கே நடத்தப் பெற்றது. கவிஞரால் வரையப்பெற்ற ஒரு சில ஓவியங்களும் அக்கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன.

**காந்தியவாதி**

அரசியலில் கவிஞர் இவ்வாறு அடியெடுத்து வைத்த காலத்தில் தான் காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் இருந்து இந்தியாவிற்குத் திரும்பி இருந்தார். தென்னாப்பிரிக்காவில் கருப்பினத்தவர்களுக்கு எதிராக வெள்ளையர்கள் காட்டிய நிறவெறியை எதிர்த்து அகிம்சை வழியில் போராடிப் பெரும் புகழ் எய்தியிருந்தார். காசியில் தம்மால் ஏற்படுத்தப்பட்ட இந்துப் பல்கலைக்கழகத்தைத் திறந்து வைக்கும்படி பண்டித மாளவியா அவர்கள் காந்தியடிகளை அழைத்திருந்தார் அவ்வழைப்பை ஏற்றுக்கொண்டு காந்தியடிகள் காசிக்குச் சென்றபோது பல்கலைக்கழகம் கட்டப்படுவதற்குப் பொருளுதவி புரிந்த பல மகாராஜாக்களும் ஜமீன்தார்களும் அங்கே குழுமியிருந்ததைக் கண்டார்கள்.

கட்டிடங்களைத் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றிய போது காந்தியடிகள் தமக்கு முன் வீற்றிருந்த செல்வந்தர்களின் வீண் ஆடம்பரங்களையும் செலவுகளையும் பெரிதும் கண்டித்தார். இந்தியாவில் இலட்சக்கணக்கான மக்கள் ஒரு வேளை உணவுக்கும் வழியின்றி வறுமையால் வாடிக் கொண்டிருக்கும் நேரத்தில் ஒரு சில செல்வந்தர்கள் ஆடம்பரத்தில் மூழ்கிக்கிடப்பது மானக் கேடு என்று இடித்துரைத்தார். செல்வந்தர்கள், பதவியில் உள்ளோர் என்றெல்லாம் பாராது அவர்களைக் கடிந்துரைத்தும் ஏழைகளின்பால் அவர் காட்டிய பரிவும் கவிஞரைப் பெரிதும் கவர்ந்துவிட்டது.

சொல்லும் செயலும் ஒத்த காந்தியடிகளை கவிஞர் அப்போதுதான் கண்டார். காந்தியடிகளின்பால் கவிஞருக்கு மிக ஆழமான மதிப்பும் மரியாதையும் வளரலாயிற்று. தொடக்கத்தில் அவர் ஒரு தீவிரவாதியாக இருந்த போதிலும் காந்தியடிகளின் உரைகளைக் கேட்டப்பின் தீவிரவாதத்தில் அவருக்கிருந்த நம்பிக்கை குறைந்தது. தொடக்கத்தில் அவரால் வெறுத்து ஒதுக்கப்பட்ட அகிம்சைக் கொள்கையின்பால் கவிஞருக்கு மேலும் நம்பிக்கை ஏற்பட்டது நாள் செல்லச் செல்ல காந்தியடிகளின் மீதும், காந்தியத்தின் மீதும் அவருக்கிருந்த பற்று வளர்ந்து கொண்டே வந்தது. 'என்கதை'யில்

அவர் கூறியுள்ளபடி அவர் காந்தியாக, காந்திப் பித்தனாக மாறிவிட்டார். காந்தியினால் ஏற்பட்ட பற்றானது ஏதோ அறியாமையால் தீடீரென்று ஏற்பட்ட உணர்ச்சியின் பாற்பட்டதன்று. நன்கு சிந்தித்துத் தெளிவுற்று அதன் விளைவாக ஏற்பட்ட அசைக்க முடியாத நம்பிக்கையின் அடிப்படையிலே அவரது காந்தியப் பற்று வளர்ந்தது. காந்தியடிகளின் அகிம்சை, சத்தியம் என்ற கொள்கைகளையும் எதிரிக்கும் கூடத் தீங்கு செய்யலாகாது என்ற மனிதநேயக்; கோட்பாட்டையும் திருவள்ளுவர் ஏற்கெனவே தமது குறள்களில் வடித்துவிட்டார். காந்தியடிகளின் உயர்பண்பினை நோக்கும்போது காந்தியடிகள் திருவள்ளுவரது கொள்கைகளின் முழு உருவமாகக் காட்சியளிப்பதாக நாமக்கல்லார் உணர்ந்தார்;. திருவள்ளுவரது கொள்கைகளை நடைமுறையில் நடத்திக்காட்டும் செயல் வீரராகக் காந்தியடிகள் விளங்குவதை அவர் கண்டார். காந்தியக் கொள்கையைப் பின்பற்ற முன்வந்தவர் அவரின் அகிம்சையை மையமாகக் கொண்டு இயற்றிய பாடலானது மக்களிடையே பெரும் வரவேற்பினைப் பெற்றது.

“ கத்தி யின்றி ரத்த மின்றி

யுத்தம் மொன்று வருகுது

சத்தி யத்தின் நித்தியத்தை

நம்பும் யாரும் சேருவீர்;....”

மேற்கண்ட பாடலானது மக்களிடையே விடுதலை உணர்ச்சியைப் பெருக்கெடுத்து ஓடச்செய்தது.

**பாரதியாருடன் சந்திப்பு**

தமிழ் நாட்டின் முதல் தேசியக் கவிஞரான பாரதியாரைச் சந்தித்ததைப் பற்றி நாமக்கல் கவிஞர் தமது வரலாற்றில் மிகுந்த உற்சாகத்தோடு எழுதுகின்றார். பாரதியாருடைய கனல் தெறிக்கும் உரை குறித்தும், உள்ளத்திலே கிளர்ச்சியை உண்டாக்குகின்ற அவரது பாடல்கள் குறித்தும் சுவைபட எழுதியுள்ளார்.

கவிஞர் ஒரு சமயம் நண்பர் ஒருவரைச் சந்திப்பதற்காகக் காரைக்குடி சென்றிருந்தார். நண்பர் ஊரில் இல்லாததால் கோவிந்தராஜ் என்னும் மற்றொரு நண்பர் இல்லத்தில் தங்கியிருந்தார்.; அச்சமயம் நண்பரின் வீட்டருகில் வசித்து வந்த வெங்கடகிருஷ்ணன்

என்பவர் 'பாரதியார் கானாடுகாத்தான் என்னுமிடத்தில் தங்கியிருப்பதாகவும் மேலும் சில நாட்களுக்கு அவர் அங்கு இருக்கக்கூடும் என்றும் நாம் உறுதியாக அவரைப் போய் சந்திப்போம்' என்று கூறினார். இதைக் கேட்ட இராமலிங்கனார் மிக்க மகிழ்ச்சி அடைந்தார். இரண்டு நாட்கள் கழித்து இருவரும் சேர்ந்து ஒரு மாட்டுவண்டியில்; பயணம் செய்து அன்று மாலை கானாடுகாத்தான் என்னும் ஊரை அடைந்தனர்.

வண்டியில் அவர்கள் பயணம் செய்யும் போது நாடகங்களுக்காகத் தாம் எழுதிய பாடல்களை உரக்கப் பாடிக்கொண்டே வந்தார். அதில் ஒன்று இராமாயணத்தில் இராமர் பாடுவதாக அமைக்கப்பட்டிருந்தது அப்பாட்டில் உணர்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிற்று. வெங்கடகிருஷ்ணரின் இதயத்ததை அது தொட்டுவிட்டது. அதன்பின்னர் இராமலிங்கமும் கிருஷ்ணர் அவர்களும் பாரதியைச் சந்தித்தனர். கிருஷ்ணர் இராமரலிங்கத்தைப் பாரதியாருக்கு அறிமுகம் செய்து வைத்தார். இராமலிங்கம் ஒரு நல்ல ஓவியப்புலவர் மட்டுமன்றி காவியப் புலவரும் கூட என்று அவர் பாரதியாரிடம் கூறினார். அப்படியானால் தம்மால் புனையப்பெற்ற பாடலைப் பாடுமாறு கேட்டுக்கொண்டார். பாடத்தயங்கி கவிஞரை வெங்கட கிருஷ்ணர் இராமர் பாடல்களைப் பாடுமாறு தூண்டினார். உடனே இராமலிங்கம் அப்பாடலை உரத்த குரலில் பாடலானார். அப்பாடல்:

"தம்மரசைப் பிறர் ஆள விட்டுவிட்டுத்

தாம்வணங்கி கைகாட்டி நின்றபேரும்

தம்முறவு தரித்திரத்தால் மாளவிட்டு

தனித்திருந்தது உண்டுடுத்துத் தருக்கினோரும்

தன்மனைவி பிறன் மனையில் தவிக்கவிட்டுத்

தானேங்கி நின்றுழன்று தயங்கினோரும்

இம்மையிலும் மறுமையிலும் இழிவடைந்து

ஏரிநரகில் அழுந்திருவர் எந்தநாளும்"

இந்தப் பாடலில் முதல் இரண்டு அடிகளைக் கவிஞர்பாடி முடிப்பதற்குள் பாரதியார் துள்ளித் துடிக்க ஆரம்பித்து விட்டார். பாட்டைக் கவனத்தோடு கேட்டபின் ‘பலே பாண்டியா! பிள்ளை! நீர் ஒரு பாவலன் என்பதில் ஐயம்மில்லை’ என்று கூறி அவரைத் தட்டிக் கொடுத்து ஆரத் தழுவிக்கொண்டார். அதன் பின்னர் நாட்டு விடுதலைக்காகவும், தமிழுக்காகவும் அவர் தமது உள்ளத்தை முழுமையாக அர்ப்பணித்து விட்டார். கவிஞரின் நாட்டுப்பற்றுக்குச் சான்றாக அவர் பாடிய பாடலொன்றைக் காணலாம்.

“இந்திய நாடிது என்னுடை நாடே

என்று தினந்தினம் நீயதைப் பாடு

சொந்தமில் லாதவர் வந்தவர் ஆள

தூங்கி கிடந்தது போனது மாள

வந்தவர் போனவர் யாரையும் நம்பி

வாடின காலங்கள் ஓடின தம்பி”

மேற்கண்ட பாடல் போன்று எண்ணற்ற பாடல்களால் மக்களிடையே விடுதலை உணர்வையும் தமிழ்ப்பற்றினையும் ஊட்டியவர் நாமக்கல் கவிஞர் என்றால் அது மிகையில்லை!

**அரசியல் தியாகி**

விடுதலைப் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தும்கூட சிறைவாசம் செய்யாமலேயே நெடுநாள் தப்பித்து வந்தார். கவிஞர் 1932ல் நடைபெற்ற சத்தியாக்கிரக இயக்கத்தில் கலந்துகொண்டபோதுதான் அவருக்குச் சிறைத்தண்டனைக் கிடைத்தது. நாமக்கல்லில் இருந்த துணை நடுவர் ஒருவரால் அவருக்கு ஓராண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ‘பி’ வகுப்பு சிறைக்கைதியாக வேலூரிலும் மதுரையிலுமாக அவர் தமது சிறைவாசத்தைக் கழித்தார். வேலூரில் தங்கியிருந்தபோது அவருக்கு அளிக்கப்பட்ட தரக்குறைவான உணவின் காரணமாக நோய்வாய்ப்பட்டார்; பின்பு விரைவிலேயே நோயினின்றும் விடுபட்டார். சிறையில் வாழ்ந்தபோது தம்மோடு சிறையில் வாழ்ந்த ஏனைய அரசியல் கைதிகளுக்குக்கெல்லாம் திருக்குறள் கம்பராமாயணம் ஆகிய தமிழ்

இலக்கிய நூல்களைப் பற்றி நாள் தோறும் பாடம் நடத்தியதோடு; திருக்குறளுக்குப் புதிய உரை ஒன்றையும் எழுதினார். கவிஞர் எழுதிய அவ்வுரையானது 1955ல் கோயம்புத்தூரில் வெளியிடப்பட்டது. கவிஞரால் எழுதப்பட்ட நூல்களிலெல்லாம் இதுவே மிகப் பெரியதும் அரியதும் ஆகும். மலைக்கள்ளன் என்ற அவரது முதல் நாவலானது அவர் வேலூர் சிறையில் இருக்கும் போதுதான் எழுதப்பட்டது. இந்நாவலானது பின்பு திரைப்படமாக்கப்ட்டதும் குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

நாமக்கல் கவிஞர் தனது வாழ்நாளில் பெரும்பாலான பகுதியை இந்திய விடுதலைப் போராட்டத்தில் கழித்தார். கவிஞரது உணர்ச்சி மிகுந்த பாடல்களும், அவருடைய எழுத்தாற்றலும், மக்கள் மனதில் சுதந்திரவேட்கையை அதிகரித்தது எனலாம். மேலும் தமிழ் மொழிக்குக் கவிஞர் ஆற்றிய தொண்டும் அளப்பரியது எனலாம்.

**சான்றெண் விளக்கம்**

1. பத்மதேவன், பாரதியார் கவிதைகள், கற்பகம் புத்தகாலயம், சென்னை, முதற்பதிப்பு - 2014, ப.25

2.இராலிங்கம் பிள்ளை.வெ, நாமக்கல் கவிஞர் பாடல்கள், சீதை பதிப்பகம்,சென்னை, நான்காம் பதிப்பு-2012, ப.53

**துணைநின்ற நூல்கள்:**

1.அனுமந்தன்.கி.ர., இந்திய இலக்கியச் சிற்பிகள், சாகித்திய அகாதமி வெளியீடு, புதுதில்லி, இரண்டாம் பதிப்பு – 2000.

2. இராமலிங்கம் பிள்ளை. வெ, நாமக்கல் கவிஞர் பாடல்கள், சீதை பதிப்பகம், சென்னை, நான்காம் பதிப்பு -2012

3.பத்மதேவன், பாரதியார் கவிதைகள், கற்பகம் புத்தகாலயம், சென்னை, முதற்பதிப்பு - 2014